திரு. எம். சுரேந்திரன் : இந்த சூப்பர் மார்க்கெட்டில் நஷ்டம் ஏற்படுவதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். அங்கே இருக்கும் பணியாளர்களுக்கு குறைந்த சம்பளம் கொடுக்கப்பட்ட காரணத்தால் இந்த நஷ்டம் ஏற்பட்டதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இந்த விடையானது மதுரை சூப்பர் மார்க்கெட்டைப் பற்றியது. அதில் ஏராளமான குறைகள் இருக்கின்றன.

Fruit Processing Unit in North Arcot district.

* 151 *Q*.—THIRU N. DENNIS : Will the Hon. the **Minister** for Co-operation be pleased to state—

(*a*) whether the Fruit Processing Unit of the North Arcot District Co-operative Marketing and Supply Society has received orders, for supply of tomato juice and peeled tomatoes, from France during 1970–71–72; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, இந்த வட ஆற்காடு மாவட்டத்தில் இருக்கின்ற ப்ரூட் பிராசசிங் யூனிட்டில் ஏற்கெனவே செய்யப்பட்ட பீல்டு பொடடோஸ், டொமடோ ஜூஸ் விற்பனை இல்லாமல் தேங்கி இருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் அறிவார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தக்காளிச் சாறு ஏற்றுமதி செய்வது பற்றி பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. ஏற்கெனவே செய்யப்பட்ட தக்காளிச் சாறுக்கு வெளிநாட்டில் விற்பனை இல்லை. ஆனால் மாம்பழச் சாறு 20 டன்னுக்கு ஆர்டர் வந்து, சோவியத் ரஷ்யாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, வேலூரிலுள்ள அந்தப் பழப்பதனிடும் தொழிற் சாலை தன்னுடைய முழு அளவான வேலையைச் செய்ய முடியவில்லை என்பது உண்மையா ? அப்படியானால் முழு அளவுக்கு வேலை செய்ய வேண்டிய பழவகைகளை உற்பத்திச் செய்வதற்கு உடனடியாக ஒரு திட்டத்தை அரசு தயாரித்து. பழச்சாறு ஏற்றுமதி செய்ய அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இந்தப் பழச்சாறு ஆலை முழுஅளவுக்கு வேலை செய்யவில்லை என்பது உண்மைதான். ஆனால், மாம்பழச் சாறு ஏற்றுமதி செய்வதாக இருந்தாலும் அதற்கு போதிய அளவுக்கு மார்க்கெட் இல்லை. இப்போது பைனாப்பிள் அன்னாசிப் பழத்தை வெட்டி டின்னில் அடைத்து வெளிநாட்டிற்கு அனுப்பும் திட்டம் ஒன்றை செயல்முறையில் நடத்தலாமா என்று அரசு ஆராய்ந்து வருகிறது.

1972 சனவரி 29]

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, தக்காளிச் சாறு அதிகமாகத் தங்கியிருக்கிறது என்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். அதன் மதிப்பீடு என்ன? அவைகள் விற்பனை செய்வதில் காலதாமதமானல் நஷ்டம் ஏற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : நான் தேங்கியிருக்கிறது என்று சொல்லவில்லை. தக்காளிச் சாரை வெளிநாட்டினர் விரும்பி வாங்குவதற்குத் தயாராக இல்லை என்றுதான் சொன்னேன்.

வங்கிகளின் குழுக்களில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இடங்கள்.

* 152 வினு.—திரு. ந. சோமசுந்தரம் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப் பாரா—

கூட்டுறவுத் துறையில் வங்கிகளுக்கு நிர்வாகிகள் தேர்ந்தெடுப் பதில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு (Reserved) தனி இடம் ஒதுக்கு வதற்கு திட்டம் ஏதேனும் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : மாநில நிலவள வங்கி யின் இயக்குநர் குழுவிலும், 16 மத்திய வங்கியின் இயக்குநர் குழு விலும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இடங்கள் ஒதுக்கீடு செய்வதற் கான விதிகள் இப்போது அமலில் இருக்கின்றன.

Transport of stags from Guindy

* 153 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether a number of stags have been transported from the Children's Park, Guindy, Madras to Javadi Hills near Vellore ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) ஆறு ஆண் புள்ளி மான்களும், மூன்று பெண் புள்ளி மான்களும், சென்னை கிண்டியிலுள்ள மான்கள் பூங்காவிலிருந்து வேலூர் வனக் கோட்டத்திலுள்ள சந்தவாசல் சரகத்தைச் சேர்ந்த அமர்தி ஒதுக்கக் காடுகளில் விடுவதற்காக, சென்ற ஆகஸ்டு மாதம் அனுப்பப்பட்டன.

Hunting in forests of Tamil Nadu

* 154 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether hunting is allowed in the forests of this State; and

(*b*) if so, the details thereof?